| Scale | | Tempo | | Style | |
|---|---|---|---|---|---|

32. உன் விண்ணப்பம் கேட்டவர்

உன் விண்ணப்பம் கேட்டவர்
உன் கண்ணீரை கண்டவர்
உன்னை நான் குணமாக்குவேன் என்றவர்
உன் அருகில் இருக்கிறார் 2 இராஜ 20:5

1

ஆவியோடு விண்ணப்பம் பண்ணுவோம்
கருத்தோடு விண்ணப்பம் பண்ணுவோம்
ஆவியோடு நாம் பாடிடுவோம்
கருத்தோடு நாம் பாடிடுவோம் 1 கொரி 14:15

2

சகாயம் கிடைக்கும் காலத்திலே
அவரை நோக்கி விண்ணப்பம் செய்வோம்
ஜலப்பிரவாகம் முன்னே வந்தாலும்
அது நம்மையோ அணுகிடாதே (சங் 32:6)

3

ஒன்றுக்கும் கவலைப்படாதிருந்து
நம் விண்ணப்பங்களை ஸ்தோத்திரதுடனே
ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும்
தேவனுக்கே நாம் தெரிவிப்போமே. பிலி 4:6